## கிழக்கு மாகாண சபை – 2021 ஆம் ஆண்டு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிழக்கு மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2023 சனவரி 10 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது 2022 ஒக்தோபர் 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து கிழக்கு மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிழக்கு மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | விவசாயத் திணைக்களம் மற்றும் மாகாண சுகாதார திணைக்களத்தின் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை ஆதார செயற்திட்டத்தினால் (PSSP) கொள்வனவு செய்யப்பட்ட முறையே ரூபா 159.80 மில்லியன் மற்றும் ரூபா 38.9 மில்லியன் கூட்டுமொத்தமான பல்வேறு நிதியல்லாத சொத்துக்கள் உரிய திணைக்களக் கணக்குகளிலும் மீளாய்வாண்டின் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, | உரிய திணைக்களத்தினால் அந்த மூலதனச் செலவினங்களை எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சேர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிதியல்லாத சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வரப்பட வேண்டியதுடன் பெறுமதியும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் திரட்டிய நிதியத்தின் மீதிகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 43 (ii) ஆம் பிரிவின் பிரகாரம் 45 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிடமிருந்து (MPCS) பெறவேண்டிய ரூபா 60.31 மில்லியன் கூட்டுமொத்தமான கூட்டுறவு நிதிய வருமானம் நாளது வரை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவீட்டை துரிதப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டது. | கூட்டுறவு நிதியத்தின் நிலுவைகள் காலக்கெடுவுக்குள் அறவிடப்பட வேண்டியதுடன் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றிற்கு மீதி கொண்டு வரப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 55.87 மில்லியன் கூட்டுமொத்த தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்துகளில் ரூபா 45.96 மில்லியன் கூட்டுமொத்தமான மருந்துகள் பல்வேறு ஆயுர்வேத நிலையங்களுக்கு வழங்கப்பட்டதுடன் ரூபா 9.91 மில்லியன் தொகையான மிகுதி மருந்துகளின் பெறுமதி ஆயுர்வேத நிலையங்களின் கணக்குகளிலும் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை ஆயுர்வேத மருந்துபொருள் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட மருந்துகளுக்கான உறுதிச்சீட்டுக்கள் ”சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் பேணப்பட்ட மருந்துப்பொருள் பதிவேடுகளில் பதிவுசெய்யப்பட்டதுடன்” சரிபார்க்கப்பட்டு கொடுப்பனவுகளுக்காக சான்றுபடுத்தப்பட்டது. எனினும், வழங்கப்பட்ட பட்டியலில் பிழையாக சேர்க்கப்படாத ரூபா 9,912,578 தொகைக்கு மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிகள் சரியான பெறுமதிகளுடன் நிதி செயலாற்றல் கூற்றிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஈ) | முதலமைச்சுக்கு சொந்தமான ரூபா 29.1 மில்லியன் கூட்டுமொத்தமான 02 வாகனங்கள் பிரதம செயலாளர் செயலகம் மற்றும் அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் என்பவற்றிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட போதிலும் இந்த வாகனங்களின் பெறுமதி முதலமைச்சு மற்றும் மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இது எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்படும். | அத்தகைய சொத்துக்களின் உரிமைத்துவத்தை உறுதிப்படுத்திய பின்னர் நிதியல்லாத சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்கிய உரிய நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால், மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக்கொள்கைகளின் பொருத்ததன்மை, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்துதல்களின் பொருத்ததன்மை மதிப்பீடு செய்யப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டன என்பது, மதிப்பீடுசெய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு – 901 – மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்படவிருந்த பல்வேறு வகையான பதவிகளுக்கான 12 வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அந்த வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தத் பரீட்சைகள் 2020.01.31 இல் கோரப்பட்ட போதிலும் கொவிட்-19 பரவல் மற்றும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அடிக்கடி நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டதன் காரணமாக 2020 அல்லது 2021 இல் இந்த பரீட்சைகளை நடாத்த முடியவில்லை. | வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளை மேலதிக தாமதமின்றி நடாத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 தலைப்பு – 902 – மாகாண பேரவை செயலகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பேரவை செயலகத்தில் பணியாற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 87 சதவீதமான 16 இரண்டாம் நிலை பதவியணி உறுப்பினர்களும் 10 ஆரம்ப | பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) நிரந்தர ஊழியர்களை ஏனைய திணைக்களங்களுக்கு இடமாற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. | கிழக்கு மாகாணத்தில் தேவைப்படும் அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களுக்கு இந்த உத்தியோகத்தர்களை |

| | | |
|---|---|---|
| நிலை பதவியணி உறுப்பினர்களும் எவ்வித பணியும் வழங்கப்படாமல் பணிக்கமர்த்தப்பட்டுள்ளதுடன் 2019 சனவரி 01 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் ஆளணி வேதனங்களாக ரூபா 40.74 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இந்த மாகாண சபையின் ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அப் பதவியணியினர் பணிக்கமர்த்தப்பட்டிருக்காதமையை கணக்காய்வு தெரிவுச் செவ்வை வெளிப்படுத்தியுள்ளது. | | இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 தலைப்பு – 912 – கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 ஆண்டுகளுக்கும் மேலாக ரூபா 4 மில்லியன் தொகையான கைத்தறி புடவை கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இந்தக் கடன்பட்டோரின் தனிப்பட்ட மீதி விபரங்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் விபரங்கள் திணைக்களத்தில் காணப்படவில்லை. | நிலுவையாக உள்ள கடனர்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கும், தேவையான விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சமமான பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (BRDP) கீழ் மாகாண முதலமைச்சு ஏறாவூர், வீரமுனை மற்றும் சீதனாவெளி ஆகிய இடங்களில் 03 ஆடைத் தொழிற்சாலைகளை ரூபா 191.04 மில்லியன் கிரயத்தில் நிர்மாணித்து 2017 ஆம் ஆண்டில் பொது தனியார் பங்குடமை ஒப்பந்தத்தின் (PPPA) கீழ் ஒரு தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 440,000 மாதாந்த வாடகைக்கு வழங்கியிருந்தது. எனினும், வீரமுனி மற்றும் சீதனாவெளியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் 04 வருடங்களுக்கும் மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக | புதிய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத சூழ்நிலை காரணமாக அந்த நடவடிக்கைகளில் பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.<br>இந்த ஆண்டு முதல் ஆடைத் தொழிற்சாலை தொடங்கப்படும் என தனியார் கம்பனி எமக்கு தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம் "சீதனவெளி" ஆடைத் தொழிற்சாலை 2022 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 36 | ஆடை தொழிற்சாலைகளை பயன்படுத்துவதற்கும், நிலுவை வாடகையை அறவிடுவதற்கும் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2017 செப்தெம்பர் 01 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 20.67 மில்லியன் நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றது. | |
| (இ) | கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் களஞ்சியத்தில் ரூபா 4.60 மில்லியன் பெறுமதியான கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் 03 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுள்ளது. | இந்த நீர் சுத்திகரிப்பு பொறியை வழமை போல் செயற்படுத்துவதற்கு திணைக்களம் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. | கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியை குறித்துரைத்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.4 தலைப்பு – 920 – பிரதம செயலாளர் செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கைரேகை அடையாள இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் புறப்படுதல்களை உறுதிப்படுத்தாமல் 2021 சனவரி 01 முதல் யூலை 31 வரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாண சபையின் பல்வேறு மாகாண திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களால் ரூபா 2,627.50 மில்லியன் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் உள்வருகை மற்றும் புறப்படுதல்களை உறுதிப்படுத்துவதற்கு கைரேகை அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 முதல் 2013 வரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மல்வத்தை - சுறுப்போடை வீதியில் 02 பாலங்களை (0+360-2+920) அமைப்பது தொடர்பான முரண்பாடுகள் காரணமாக ரூபா 150 மில்லியன் பிணக்குத்தீர்த்தல் கொடுப்பனவு மீளாய்வாண்டில் மாகாண நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டது. எனினும் இக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டிருக்காததுடன் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் | அத் தொகையின் கொடுப்பனவிற்கு முன்னர் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பொது திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததென்பதை இது உறுதிப்படுத்துகிறது.<br><br>நடுவர் 2014 பெப்ரவரி 12 இல் தனது தீர்மானத்தை வழங்கினார், தீர்மானம் அறிவிக்கப்பட்ட நேரத்தில் செயற்திட்டப் பணி முடிவடையும் நிலையில் இருந்ததுடன் தீர்மானத்தின் பிரகாரம் அது | முறையான விசாரணையை நடாத்தப்பட வேண்டியதுடன் இந்தக் கொடுக்கல்வாங்கல் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தால் அதற்குப் பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்படுதல் வேண்டும். |

இதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தார். மேலும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இந்த முரண்பாடுகளை தீர்க்கும் வாய்ப்பை இழந்ததால் ஒப்பந்ததாரருக்கு ரூபா 11 மில்லியன் செலுத்தப்பட்டது. இதனால் ரூபா 150 மில்லியன் பிணக்குத்தீர்த்தல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ரூபா 139 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த பிணக்குத் தீர்த்தல் கொடுப்பனவை உரிய உத்தியோகத்தர்கள் செலுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால், அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் திறைசேரியின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த கொடுப்பனவுகள் திறைசேரியால் மேற்கொள்ளப்படும் என திறைசேரியின் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் பிரதம செயலாளருக்கு முகவரியிடப்பட்ட 2019 ஏப்ரல் 09 ஆம் திகதிய பீடி/ஜீபிஎஸ்/321/02/02 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டது. எனினும், மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படாமல் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இந்த நடுவர் மன்ற நடைமுறையை மேற்கொள்வதற்காக சட்டத்தரணியின் கட்டணமாக ரூபா 6.6 மில்லியன் தொகையும் தாங்கிக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) திருகோணமலை மாவட்டத்தில் கிழக்கு மாகாண சபைக்கான நான்கு மாடி அலுவலகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக கிழக்கு மாகாண பேரவை செயலகம் என்ற தலைப்பின் கீழ் கட்டிடங்கள் ஒப்பந்ததாரருக்கு சாதகமாக இருந்தது.

எனவே, கிழக்கு மாகாண சபையானது உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்பட்ட அப்போதைய மேற்பார்வை ஆலோசகர்களின் பரிந்துரையுடன் ஒரு பிணக்குத் தீர்த்தலை ஆரம்பித்தது.

1995 இன் 11 ஆம் இலக்க பிணக்குத்தீர்த்தல் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் நடுவர் தெரிவுசெய்யப்பட்டார்.

உலக வங்கி நிதியிடப்பட்ட வீதிச் செயற்திட்டம் செயற்பாட்டில் இருந்தபோது பிணக்குத்தீர்த்தல் செயன்முறை தொடங்கப்பட்டதுடன் உலக வங்கி கடன் காலாவதியான பின்னர் செயற்திட்ட நிதியிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது, மாகாண சபை நிதியிலிருந்து சட்டத்தரணியின் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 205.38 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் ரூபா 194.5 மில்லியன் பெறுமதியில் ஒப்பந்ததாரருக்கு 2017 திசெம்பர் 18 இல் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்தம் 2018 திசெம்பர் 04 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் முடிவுறுத்தல் திகதிக்கும் 2021 யூலை 31 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஒப்பந்த காலம் 07 முறை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஒக்தோபர் 31 வரையிலும் இந்த இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டு குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இப் பணி 2017 திசெம்பர் 04 இல் வழங்கப்பட்டது. பூர்த்தி செய்தல் காலம் ஒரு வருடமாகும். அதன் பிரகாரம் பூர்த்தி செய்தல் திகதி 2018 திசெம்பர் 03 ஆகும். எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒப்பந்ததாரரால் இந்தப் பணிகளை பூர்த்தி செய்ய முடியவில்லை.<br><br>ஆனால், ஒப்பந்ததாரர் 2021.12.07 இல் கட்டிடத்தை ஒப்படைத்திருந்தார். ஒப்பந்த உடன்படிக்கையில் இல்லாத பிரிவினை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் இது வேறு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு, கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு, தற்போது குடியிருப்பதற்கு தயாராக உள்ளது. | ஒப்பந்த காலப்பகுதியினுள் கட்டிட பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கட்டிடத்தை குறித்துரைத்த நோக்கங்களிற்கு பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இந்த தாமதங்கள் தொடர்பாக, ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடம் இருந்து ஏறத்தாழ ரூபா 5 மில்லியன் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021 யூலை, ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் நிலவிய கொவிட்-19 இன் 4 வது அலைகள் காரணமாக ஒப்பந்ததாரர் கால நீடிப்பைக் கோரியிருந்தார், மேற்கூறிய காரணத்தை கருத்தில் கொண்டு இது தொழில்தருநரால் அங்கீகரிக்கப்பட்டதுடன் பின்னர் தாமதக் கட்டணங்கள் விதிக்கப்படவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 தலைப்பு – 921 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிதி**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் சார்பில் மாகாண சபையின் வருமானப் பிரிவால் சேகரிக்கப்பட்ட ரூபா 274.74 மில்லியன் மற்றும் ரூபா 4.64 மில்லியன் தொகையான முறையே நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்வை என்பன உரிய உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பப்பட்டதை உறுதிப்படுத்தி வருடாந்த செயலாற்றல் அறிக்கை அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் தொடர்பான தகவல்களை பயனர் புரிந்து கொள்ளும் வகையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 இன் 01 ஆம் இலக்க கிழக்கு மாகாணத்தின் 89 (1) ஆம் நிதிச் சட்டத்தின் பிரகாரம் சொத்து விற்பனையின் போது தவணை தவறிய வரிகளை அறவிடுதல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2014 சனவரி 01 முதல் 2022 சனவரி 31 வரையான காலப்பகுதியில் 380 சந்தர்ப்பங்களில் அவ்வாறு தவணை தவறிய ரூபா 33.32 மில்லியன் தொகையை மாகாண சபைக்கு அறவிடுவதஙற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2008 இன் 01 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் கிழக்கு மாகாண ஆணையாளருக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் மாத்திரமே உள்ளது. எனினும், ஆணையாளர் 2020.11.05 இலேயே நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் செலுத்தாத வரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பார். | வருமானத்தை அறவிட்டு இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 05 திணைக்களங்கள் தொடர்பாக 02 வருடங்களுக்கு மேலாக காணப்பட்ட ரூபா 11.30 மில்லியன் பிடித்துவைத்தல் பணம் மற்றும் 12 திணைக்களங்களிற்குரிய ரூபா 18.75 மில்லியன் தொகையான நானாவித வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகையை இந்த ஆண்டிலேயே தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்தத் தொகைகளை விரைவில் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண பேரவை செயலகம், பிரதம செயலாளர் அலுவலகம், மாகாண திறைசேரி மற்றும் | **கல்வித் திணைக்களம்:** 2021 ஆம் ஆண்டில் வருடாந்த கணக்குக் கூற்றில் உள்ள | அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் |

| | | |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபையின் 04 திணைக்களங்கள் தொடர்பாக 05 வருடங்களிற்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 27.29 மில்லியன் கூட்டுமொத்த தொகையான அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு மீதிகள் தொடர்பாக 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 15,501,613 தொகை 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ரூபா 904,108 ஆக குறைக்கப்பட்டுள்ளது.<br><br>**PDHS:** தீர்ப்பனவு செய்யப்படாத கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் பல பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது.<br><br>**பேரவை செயலகம்:** இரண்டு உறுப்பினர்கள் அவர்களது கடன் மீதிகளை முழுமையாக தீர்ப்பனவு செய்துள்ளதுடன் ஒரு உறுப்பினர் அவரது ரூபா 54,117.54 கடன் மீதியிலிருந்து ரூபா 15,000.00 தொகையை தீர்ப்பனவு செய்துள்ளார். மற்ற உறுப்பினர்கள் இதுவரை அவர்களது கடன் மீதியை செலுத்தியிருக்கவில்லை.<br><br>**கட்டிடங்கள் திணைக்களம்:** கடன் மீதிகளை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>**பிரதம செயலாளர்:** ரூபா 143,926.00 இடர் கடன் மீதியில் ரூபா 129,757.51 மீதியை அறவிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. | கணக்கின் இந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6 தலைப்பு – 922 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - திட்டமிடல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள், காரணி அடிப்படையிலான மூலதன மானியங்கள் உட்பட பல்வேறு மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 5,983 மில்லியன் மீளாய்வாண்டில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 3,517 மில்லியன் | ஏற்றுக்கொள்ளப்பட்டது, எதிர்காலத்தில் இந்த பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் செயற்பாட்டுத் திட்டம், பெறுகைக் கால அட்டவணைகள் உள்ளடங்கிய பெறுகைத் திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதற்கும் குறித்துரைக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியேற்பாடுகளை குறித்துரைத்த நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது 58 சதவீதம் மாத்திரமே உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மிகுதி ரூபா 2,466 மில்லியன் அல்லது 42 சதவீதம் மீளாய்வாண்டிற்குள் விடுவிக்கப்பட்டிருக்காததுடன் இதற்குக் காரணம் செயல்நடவடிக்கைத் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகைக்கால அட்டவணை உள்ளடங்கலான உட்கட்டமைப்புத் திட்டங்கள் முறையாகத் தயாரிக்கப்படவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபையின் 05 அமைச்சுக்களும், 09 வெவ்வேறு நிறுவனங்களும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7 தலைப்பு – 923 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தின் கீழ் உள்ள 31 அரசாங்க விடுதிகள் மற்றும் 02 விருந்தினர் இல்லங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்காததுடன் இந்த காணிகளின் உரிமைத்துவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் அளவைத் திட்டங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சில வகையான நிர்வாகம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் மற்றும் நிலம் தொடர்பான அனைத்து ஆவணங்கள் மற்றும் மதிப்பீட்டிற்கு சரியான தீர்வைக் காண்பதற்கு முழுமையான அணுகுமுறை தேவைப்படுகிறது. இந்தப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, பயனுள்ள தீர்வுகளைக் கண்டறிந்துகொள்வதற்கு அனைத்து அமைச்சுக்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கூட்டாகச் செயற்படுவதற்கான திட்டம் எங்களிடம் உள்ளது. | அரச விடுதிகள், விருந்தினர் இல்லங்களின் பெறுமதிகளை மதிப்பிட்டு, கணக்குகளிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட | அங்கு தேவையான தகைமைகளைப் பெறுகின்ற பொறியியலாளர்கள் மாகாண சபையில் வகுப்பு I பதவியைப் | கிழக்கு மாகாண சபையில் இலங்கை பொறியியல் சேவைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் இலங்கை பொறியியல் சேவைகளின் தரம் I உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 03 மாத்திரமே ஆகும். எனினும் கிழக்கு மாகாண சபையில் 13 தரம் I உத்தியோகத்தர்கள் பணிக்கமர்த்தப்பட்டதுடன் அவர்களில் 10 பேர் தரம் II மற்றும் தரம் III பதவிகளில் பணியாற்றியிருந்தனர். | பெற்றிருக்க வேணடிய போதிலும் வகுப்பு I பொறியியலாளர்களுக்கு மூன்று பதவிகள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளன. மாகாணத்தில் குறைந்தபட்சம் 6 எண்ணிக்கைகளில் வகுப்பு I பதவியை அதிகரிப்பதற்கு கோரிய போதிலும் இன்னும் பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. | பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பல்வேறு தரங்கள் தொடர்பான பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 19,418 ஆக காணப்பட்ட போதிலும் அதில் 30 சதவீதம் அல்லது 5,827 ஊழியர் வெற்றிடங்கள் 05 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்பட்டன. எனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2,607 உத்தியோகத்தர்கள் பல்வேறு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | பிரதி பிரதம செயலாளர் – ஆளணி மற்றும் பயிற்சியானது கிழக்கு மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களினதும் பதவியணி விபரங்களை நாளதுவரையாக்குவதற்கு மாத்திரமே பொறுப்பாகும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிக பதவியணியினரை தேவையான மாகாணத்திற்கு இடமாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.8 தலைப்பு – 924 – பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - பொறியியல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் பதிவை இரத்து செய்யாமல் ரூபா 5.84 மில்லியன் கழிவுப் பெறுமதியில் 17 வாகனங்களை ஏலமிட்டிருந்தது. | எதிர்காலத்தில் இதுபோன்ற தவறு இடம்பெற மாட்டாது. | பெறுகைத் தொகை மதிப்பிடப்பட்ட தொகையை விட அதிகமாக இருக்கக்கூடாது. |
| (ஆ) | முன்னாள் உத்தியோகத்தர் கிழக்கு மாகாண பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு செயலகத்தில் பிரதி பிரதம செயலாளர் (பொறியியல்) பதவிக்கு 2021 | 2021 ஏப்ரல் 01 முதல் நவம்பர் 30 வரை மீண்டும் பணிக்கமர்த்தியமை கௌரவ ஆளுநரால் மாதாந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டது. | பொதுச் சேவை ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏப்ரல் முதல் நவம்பர் வரை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டார். இந்த நியமனத்திற்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படாததுடன் ஒப்பந்த அடிப்படையில் அவர் பணிபுரிந்த காலத்தில் அவருக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1.34 மில்லியன் செலுத்தப்பட்டது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் பழுதுபார்ப்பதற்கு செலவு குறைந்தவை என இனங்காணப்பட்ட 284 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. | இயந்திரவியல் பொறியியலாளர் பரிந்துரைத்த தொழில்நுட்ப அறிக்கையின் பிரகாரம் திணைக்களத் தலைவர்கள் தங்கள் வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் நிதி கிடைக்காமை மற்றும் வாகன உதிரிபாகங்கள் கிடைக்காமை காரணமாக சில திருத்தங்கள் தாமதமாகியிருந்தமையை நாங்கள் இனங்கண்டோம். எவ்வாறாயினும், வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் திணைக்களத் தலைவர்களின் கடமையாகும். | இந்த வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.9 தலைப்பு – 926 – மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் பல்வேறு திணைக்களங்களுக்கு உள்ளக கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் மாகாண சபையின் திணைக்களத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மூலம் அமுலப்படுத்தப்பட்டன என்பதற்கான சான்றாதாரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளக கணக்காய்வு பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**1.5.10 தலைப்பு – 927 – மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிழக்கு மாகாணம் என்ற பெயரின் கீழ் பதிவு செய்யப்பட்ட 112,068 வாகனங்களுக்கு 10 வருடங்களுக்கு மேலாக வருமான அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படாமல் இருந்ததுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு எதிராக மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானமல்லாத அனுமதிப்பத்திரம் பெற்ற வாகனங்கள் தொடர்பாக மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம் (ஆர்எம்வி) தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகன வருமான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் இலத்திரனியல் வருமான அனுமதிப்பத்திர முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக ரூபா 6.43 மில்லியன் தொகையை செலவிட்டிருந்த போதிலும் பயனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இல்லாத காரணத்தால், மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாகனங்களில் 99 சதவீதம் அல்லது 409,603 வாகனங்கள் இந்த ஒன்லைன் முறைமையைப் பயன்படுத்தியிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு வழிகாட்டல்கள் புத்தகம் மற்றும் துண்டு பிரசுரங்களின் வடிவில் தயாரிக்கப்பட்டது. அத்துடன், இந்த வழிகாட்டல்கள் பிரதேச செயலகத்திலும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. | இந்த ஒன்லைன் முறைமையை பயன்படுத்தும் வகையில் பயனாளிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.11 தலைப்பு – 931 – விவசாயத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ”நிலையான விவசாயம்” என்ற இயற்கை விவசாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழலுக்கு உகந்த பாதுகாப்பான விவசாயப் பிரிவுகளை அமைப்பதற்கும் விவசாய உற்பத்திப் பரிசோதனை ஆய்வுகூடத்தை அமைப்பதற்கும் முறையே | பாதுகாக்கப்பட்ட விவசாயப் பிரிவை நிறுவுவதற்கு கல்வனைஸ்ட் குழாய்கள், நிழல் வலைகள் மற்றும் நுண் நீர்ப்பாசன முறைமையுடன் கூடிய புற ஊதாக் கதிர்கள் சுத்திகரிக்கப்பட்ட (UV treated) பொலித்தீன் தேவைப்படுகிறது. கொவிட் 19 தொற்றுநோய் | நிதியாண்டிற்குள் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 25 மில்லியன் மற்றும் ரூபா 200 மில்லியன் தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. எனினும், இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், கட்டுநிதிப் பணம் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண விவசாய திணைக்களத்திற்கு கரிம உரங்களை உற்பத்தி செய்வதற்காக ரூபா 260.2 மில்லியன் தொகை வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 51.2 மில்லியன் அல்லது 20 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டது. | நிலைமை காரணமாக தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் மற்றும் விலை தளம்பல்கள் தொடர்பாக கௌரவ ஆளுநருடனான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. பின்னர் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை கைவிட்டு நிதியை திறைசேரிக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | |
| (ஆ) | ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு முன்னுதாரணமாக வீட்டுத்தோட்டம் மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு நுகர்வை ஊக்குவிக்கும் வகையில் பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களில் 126 இயற்கை தோட்டங்களை அமைப்பதற்காக விவசாய திணைக்களத்திற்கு 2017, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 9.88 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நச்சு உணவு நுகர்வு. எனினும் ஆர்வமுள்ள தரப்பினர் ஈடுபடாததன் காரணமாக இந்த செயற்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்ள முடியவில்லை. இதன் காரணமாக இந்த செயற்திட்டத்திற்காக 60 மாதிரி நிறுவனங்களுக்கு செலவிடப்பட்ட ரூபா 1.7 மில்லியன் செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது. | சில பாடசாலைகள் மாதிரி தோட்டங்களை பராமரிக்கவில்லை. விவசாய பயிற்றுனர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் தங்கள் கள விஜயத்தை அவர்களின் முன்கூட்டிய நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்து பாடசாலைகளில் மாதிரி தோட்டங்களை மேற்பார்வை செய்வதற்கு அறிவுறுத்தப்படுகின்றனர்.<br><br>தோட்டங்களை தொடர்ந்து பராமரிப்பதற்கு உபகரணங்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. | இச் செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கரடியனாறு சேவை பயிற்சி நிறுவனத்தில் காளான் செயற்திட்டத்திற்காக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் ரூபா 999,649 கிரயத்தில் 09 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு விவசாய திணைக்களத்திடம் 2019 ஏப்ரலில் கையளிக்கப்பட்ட போதிலும் மேற்படி இயந்திரங்கள் 03 வருடங்களுக்கு மேலாக தொடர்புடைய பணிகளுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | காளான் பிரிவு நன்றாக இயங்கவில்லை. இது தொடர்பாக விவசாய பிரதிப் பணிப்பாளரிற்கு பின்தொடர் நடவடிக்கையை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | இந்த இயந்திரங்களை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பாரம்பரிய உணவு ஊக்குவிப்பு நிலையத்தை நிறுவுவதற்கும் உபகரணங்களை வழங்குவதற்கும் ரூபா 7.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது 2020 ஒக்தோபர் 12 இல் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட போதிலும், கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் அந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாததுடன் 2022 நவம்பர் 30 வரை விளைவற்றிருந்தது. | 2020.09.07 இல் "ஹெல பொஜுன்" ஐ திறப்பதற்காக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் எதிர்பாராதவாறு கொரோனா பெருந்தொற்றின் எதிர்பாராத சூழ்நிலை காரணமாக இயல்பு நிலைக்கு வரும் வரை இது தாமதமானது. எனினும் அது செயற்படுவதாகக் கூறப்பட்ட நேரத்தில், கலவை கலப்பான், ஈர கிரைண்டர் (Mixture blender, Wet grinder) மற்றும் காஸ் குக்கர் (சிறியது) ஆகியவற்றுக்கான உத்தரவாதக் காலம் காலாவதியாகியிருந்தது. இந்த நிலைமை எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்தது. | பாரம்பரிய உணவு ஊக்குவிப்பு நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடம் மற்றும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.12 தலைப்பு – 932 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியசாலைகளில் 35 வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமல் அல்லது முறையாக அகற்றப்படாமல் ஒரு வருடத்திற்கு மேலாக விளைவற்றிருந்தன. | இந்த வாகனங்களை கிழக்கு மாகாண பிரதிப் பிரதம பொறியியல் அலுவலகம் - கிழக்கு மாகாணத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | இந்த வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.13 தலைப்பு – 934 – நீர்ப்பாசனத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிட வளாகத்தில் அம்பாறை ஆளுநர் செயலகத்திற்கான உப அலுவலகத்தை அமைப்பதற்காக 2021 இல் ரூபா 1.2 மில்லியன் செலவினம் ஏற்பட்டிருந்தது. அப்படி இருந்தும், இந்த வளாகம் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் ஓராண்டுக்கு மேலாக எவ்வித கட்டணங்களும் அறவிடப்படாமல் உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளுக்காக வழங்கப்பட்டது. | உப அலுவலக நோக்கமாகும். | பயன்படுத்துவதற்கும் வாடகை நிலுவையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.14 தலைப்பு – 941 – கல்வித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்த போதிலும் திருகோணமலை மாவட்டத்தின் கஸ்ரமான மற்றும் மிகவும் கஸ்ரமான பிரதேசங்களில் அமைந்துள்ள 179 பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 2021 மே, யூன், யூலை மற்றும் செப்தெம்பர் மாதங்களுக்காக ரூபா 18.44 மில்லியன் கூட்டுமொத்தமான கஷ்ட படிகள் வழங்கப்பட்டுள்ளன. | குறிப்பிட்ட ஆசிரியர்களோ அல்லது அதிபர்களோ அந்தக் கஸ்ரமான/ மிகவும் கஸ்ரமான பகுதிகளில் அந்தக் காலத்தில் இருந்தார்களா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.<br><br>இது தொடர்பாக மத்திய கல்வி அமைச்சு மூலம் அறிவுறுத்தப்படுமானால், படியை மீளப் பெற முடியும். | கொவிட்-19 காலப்பகுதியில் கல்விசார் ஊழியர்களின் பணிக்கமர்த்தலை உறுதிப்படுத்தாமல் செலுத்தப்பட்ட படிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிழக்கு மாகாணத்திலுள்ள 1,117 பாடசாலைகள், 17 வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றில் உள்ள பொருளிருப்பு உருப்படிகளின் வருடாந்த மெய்மையாய்வு 02 வருடங்களுக்கு மேலாக நடாத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக இத் திணைக்களத்தின் சொத்து முகாமைத்துவ முறைமை இது வரை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | அவற்றின் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்து பாடசாலைகளிலும் வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திரு/கிண்/வான் எல்ல முஸ்லிம் கல்லூரிக்கு ஆங்கில ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 26 முதல் அந்த ஆசிரியர் கடமைக்காக பாடசாலைக்கு அறிக்கையிட்டிருக்காத போதிலும் அத் திகதிக்கும் 2021 திசெம்பர் 31 இற்கும் இடையில் அவருக்கு தனிப்பட்ட சம்பளமாக ரூபா 1.57 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அவ்வாறு செலுத்திய பணத்தை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தி/திரு/கோமரன்கடவல மகா வித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்ட கணித ஆசிரியருக்கு 2008 திசெம்பர் 31 இற்கும் 2021 செப்தெம்பர் 30 இற்கும் இடையில் அவர் பாடசாலையில் பணிக்கு அறிக்கையிட்டிருக்காத போதிலும் ரூபா 5.59 மில்லியன் தனிப்பட்ட சம்பளம் வழங்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை | அவ்வாறு செலுத்திய பணத்தை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள 66 பாடசாலைகளின் மாணவர்களுக்குப் பல்வேறு பாடங்களைக் கற்பிப்பதற்காக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட 248 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களாகப் பணிக்கமர்த்தப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான படிகளாக அவர்களுக்கு ரூபா 59.52 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர் நியமனக் கடிதம் வழங்கப்படாமல் 2022 யூலை 31 வரை கற்பிப்பதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை | இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு முறையாக ஆசிரியர் நியமனக் கடிதத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை அதிபர் சேவையை சேர்ந்த அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 06 வருடங்களுக்கு மேலாக பல்வேறு பாடசாலைகளில் 360 பேர் பதில்கடமையாற்றும் அதிபர்களாக கடமையாற்றியிருந்தனர். இது மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 25 சதவீதமாகும். | கருத்துரை வழங்கப்படவில்லை | இலங்கை அதிபர் சேவையிலிருந்து அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கிழக்கு மாகாணத்திலுள்ள 15 பிராந்தியக் கல்வி அலுவலகங்களில் அதிபர்களுக்கான 566 வெற்றிடங்கள் காணப்பட்ட | கருத்துரை வழங்கப்படவில்லை | மாகாணத்தில் உள்ள மேலதிகம் மற்றும் பற்றாக்குறையை சமநிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அம்பாறை மாவட்டத்தில் 02 வலயக் கல்வி அலுவலகங்களில் 20 அதிபர்கள் மேலதிகமாக காணப்பட்டனர். | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கிழக்கு மாகாணத்தில் 17 வலயக் கல்வி அலுவலகங்கள் உள்ள நிலையில், அதில் 11 வலயக் கல்வி அலுவலகங்களில் 1,509 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ள போதிலும், 06 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு மேலதிகமாக 664 ஆசிரியர்களை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நியமித்திருந்தார். இதனால் கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் 18 பாடங்களுக்கு 100 ஆசிரியர்கள் மேலதிகமாக இருந்தனர். | கருத்துரை வழங்கப்படவில்லை | மாகாணத்தினுள் உள்ள ஆசிரியர்களின் மேலதிகம் மற்றும் பற்றாக்குறையை சமநிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.15 தலைப்பு – 950 – சுகாதார அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபையில் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளுக்கு 40 மருத்துவ ஆலோசகர்கள், 138 வைத்திய அதிகாரிகள், 323 தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையால் நோயாளர் பராமரிப்பு சேவைகளை இடையூறின்றி மேற்கொள்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. | மருத்துவ ஆலோசகர், மருத்துவ அதிகாரி மற்றும் தாதிய உத்தியோகத்தர் நியமனம் வரிசை அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | மருத்துவ ஆலோசகர், மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் தாதிய உத்தியோகத்தர் வெற்றிடங்களை காலதாமதமின்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.16 தலைப்பு – 951 – சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 8,081.24 மில்லியன் நிதியேற்பாடு | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் பாதீடாக ரூபா 10,088.92 மில்லியனிற்கு வரைவு மதிப்பீட்டை தயாரித்திருந்த | பாதீடப்பட்ட மதிப்பீட்டிற்குள் செலவினத்தை மட்டுப்படுத்துவதற்கு அல்லது பாதீட்டை திருத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 8,002.08 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 272.10 மில்லியன் பொறுப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 192.94 மில்லியன் கடப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. | போதிலும் ரூபா 6,927.04 மில்லியன் மாத்திரமே அங்கீகரிக்கப்பட்ட பாதீடாக ஒதுக்கப்பட்டதுடன் ரூபா 1,154.20 மில்லியன் குறைநிரப்பு நிதியேற்பாட்டுடன் கூட்டுமொத்தமாக ரூபா 8,081.24 மில்லியன் தொகை 2021 ஆம் ஆண்டிற்கான மொத்த மீண்டெழும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சால் வெளியிடப்பட்ட 01-18/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுப்படுத்தல் செயற்திட்டத்தில் (PSSP) பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட சுகாதாரப் பதிவேடு (PHR) வழங்கப்பட வேண்டும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள 05 வைத்தியசாலைகளில் அதன் பிரகாரம் கையாளப்பட்டிருக்கவில்லை. | சில வைத்தியசாலைகள் இந்த PHR ஐ வழங்குவதில் பின்தங்கியுள்ளன, வழக்கமான கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல் நிலைமையை மேம்படுத்தியுள்ளது. எனினும், உலக வங்கியின் செயற்திட்ட அலுவலகத்தின் படி கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது PHR மற்றும் ஏனைய செயற்திட்ட நோக்கெல்லைகளை வழங்குவதில் சிறந்து விளங்குகிறது. பற்றாக்குறை ஏற்படும் இடங்களில் PHR ஐ வழங்குவதற்கு நாங்கள் முயற்சிப்போம். | மீதமுள்ள 05 வைத்தியசாலைகளில் தனிப்பட்ட சுகாதார பதிவேட்டை (PHR) பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.17 தலைப்பு – 952 – சுதேச மருத்துவ திணைக்களம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சேருவில மத்திய ஆயுர்வேத மருந்தகத்தின் நிர்மாணப் பணிகள் ரூபா 7 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் 2021 திசெம்பர் 01 இல் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மே 31 வரை அத்திவாரப் பணிகள் மாத்திரமே நிறைவடைந்திருந்ததுடன் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | சேருவில மத்திய ஆயுர்வேத மருந்தகத்தின் நிர்மாணப் பணிகள் ஒப்பந்ததாரர் இலக்கு பூர்த்தி செய்தல் காலப்பகுதியினுள் பணிகளை பூர்த்தி செய்யாததன் காரணமாக நிறுத்தப்பட்டது. மேலும், நிர்மாண பணிக்கான காலநீடிப்பை ஒப்பந்ததாரர் கோரவில்லை. | ஒப்பந்த காலப்பகுதிக்குள் கட்டிட பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.18 தலைப்பு – 962 – காணி நிர்வாகத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாணத்தில் கடந்த 5 வருடங்களாக 5,155 பேர் சட்டபூர்வ காணி உரிமையற்ற அரச காணிகளில் குடியிருந்து வருகின்றனர். மீளாய்வாண்டில் காணி நிர்வாக திணைக்களம் 1,988 சட்டவிரோத குடியிருப்பாளர்களுக்கு காணி சுவீகரிப்பு அறிவித்தல்களை வழங்கியிருந்தது. இதன் காரணமாக 2022 யூன் 30 வரை நீதிமன்றங்களில் 1,509 பேர் தாக்கல் செய்த வழக்குகள் அதிகாரிகளின் அலட்சியத்தால் முடிக்கப்படவில்லை. | காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 179 மற்றும் 180 ஆம் இலக்க காணி கட்டளையின் பிரகாரம் பிரதேச செயலாளர், குடியேற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் இந்த கடமைக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் என்பதை திட்டவட்டமாக வலியுறுத்துகின்றன. | நிலுவையாக உள்ள சட்ட வழக்குகளை தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.19 பட்டயக் கணக்குகள்**

**(அ) வீடமைப்பு அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த ஆண்டின் இறுதி தேறிய சொத்து மீதி ரூபா 5.03 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் ஆரம்ப மீதியாக ரூபா 8.33 மில்லியன் காட்டப்பட்டது. இதன் காரணமாக தேறிய சொத்துக்களில் ரூபா 3.3 மில்லியன் விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் தேறிய சொத்துக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. அடுத்த ஆண்டுகளில் இதுபோன்ற தவறு இடம்பெறாது என்பதையும் அடுத்த நிதிக்கூற்றில் இத் தொகை சீர்செய்யப்படும் என்பதையும் உறுதிப்படுத்துகிறோம். | நிதிக்கூற்றிற்குச் சரியான தொகை கொண்டு வரப்பட வேண்டும். |
| (ii) | 03 மாவட்டங்களில் கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக செலுத்தப்பட்டிருக்க வேண்டிய ரூபா 3.72 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்படவில்லை. | அடுத்த ஆண்டு இறுதிக் கணக்கைத் தயாரிக்கும்போது இந்தப் பிழைகள் சீர்செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் கையில் உள்ள விலைப்பட்டியல்கள் பொறுப்பாக இனங்காணப்பட வேண்டும். |
| (iii) | 2018 செப்தெம்பர் 01 முதல் 2021 மே 31 வரையான காலப்பகுதிக்கு அதிகாரசபையால் ஒப்பந்த | 7 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாகவுள்ள பங்களிப்பை செலுத்துவதற்கு கிழக்கு மாகாண வீடமைப்பு | தொழிலாளர் விதிகள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட 38 ஊழியர்களின் சார்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பங்களிப்பை செலுத்தாததற்காக ரூபா 4.64 மில்லியன் தண்டப் பணம் விதிக்கப்பட்டது. மேலும், அதிகாரசபை மேற்படி பங்களிப்புக்கள் மற்றும் தண்டப்பணத்தை உரிய நிதியங்களுக்கு இதுவரை அனுப்பத் தவறியிருந்தது. | அதிகாரசபை (EPHA) திருகோணமலை தொழில் திணைக்களத்துடன் இவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தியது. அதன் பிரகாரம், செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை கணிப்பிடுவதற்கு 7 ஆண்டுகளாக செலுத்திய சம்பள விபரங்களை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளனர். EPHA சம்பள விபரங்களைத் தயாரித்து 2022.03.04 இல் திருகோணமலை தொழில் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளது. திருகோணமலை தொழில் திணைக்களம் செலுத்த வேண்டிய தொகையை அறிவித்தவுடன் நிலுவைத் தொகை செலுத்தப்படும். எனினும், EPF மற்றும் ETF இற்கான பங்களிப்பு 2021 யூன் முதல் செலுத்தப்பட்டு வருகிறது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | அதிகாரசபைக்கு தேவையான பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படவில்லை, அதன் பிரகாரம் 38 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையின்றி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் மீளாய்வாண்டில் ரூபா 14.77 மில்லியன் தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டுள்ளது. | 2022.02.22 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரத்திற்காக புதிய பதவியணியினரை மீண்டும் சமர்பிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | பதவியணியினரை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 03 மாவட்டங்களில் கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக செலுத்தப்பட்டிருக்க வேண்டிய ரூபா 1.40 மில்லியன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்படவில்லை. | PSDG நிதியின் கீழ் வருகின்ற நிர்மாணப் பணிகளுக்காக கைகளில் உள்ள விலைப்பட்டியல்கள் 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப் பொறுப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் கையில் உள்ள | நிதிக்கூற்றில் 2021 திசெம்பரில் உள்ளவாறான பொறுப்புக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விலைப்பட்டியல்களை பொறுப்பாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையானது 13 Point of Sale (POS) மற்றும் GPRS முறைமையுடன் இணைக்கப்பட்ட 2,000 டிக்கெட்டுக்களை 2015 யூன் 08 இல் ரூபா 1.14 மில்லியன் கிரயத்தில் பேருந்து நிலையங்களில் தனியார் பேருந்துகளின் வருகை மற்றும் புறப்படுதல்களை பதிவு செய்வதற்கு கொள்வனவு செய்திருந்ததுடன் அந்தப் பொருட்கள் 06 ஆண்டுகளுக்கும் மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் களஞ்சியங்களில் விளைவற்றிருந்தன. | தற்போது முறைமை சோதனைக் காலப்பகுதியின் கீழ் வேலை செய்கிறது. சோதனைக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் மென்பொருள் சரியாகச் செயற்பட்டால் இந்த 13 POS இயந்திரத்தை மூன்று மாவட்டங்களிலும் அமுல்ப்படுத்தலாம். | மேலதிக காலதாமதமின்றி முறைமையை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 06 இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் 35 ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விஞ்சி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அந்த உத்தியோகத்தர்களுக்கு ஆளணி வேதனங்களாக ரூபா 9.06 மில்லியன் செலுத்தப்பட்டது. | கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் சேவைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக அதிகளவான பதவியணி தேவைப்படுகின்றதுடன் (E.P.) இன் முன்னாள் முதலமைச்சர் மற்றும் ஆளுநரின் பரிந்துரையின் பேரில் பதவிகள் இப் பதவிநிலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு மாத்திரம் பணிக்கமர்த்தி ஆளணி வேதனங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | அதிகாரசபையின் பதவியணியினரிற்கான சம்பளம் மற்றும் படிகளின் கொடுப்பனவு அதிகாரசபையால் உருவாக்கப்படும் பணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மாகாண முதலமைச்சு அவ்வாறு செய்யாமல் 05 வருடங்களுக்கு மேலாக அந்த செலவினங்களை தாங்கியிருந்தது. | அதிகாரசபை மாதாந்தம் ரூபா 1.5 மில்லியன் வருமானத்தை ஈட்டுகிறதுடன் இது மீண்டமும் செவினத்தில் அரைவாசி மாத்திரமேயாகும். | போக்குவரத்து அதிகாரசபை அதனது நாளாந்த செலவினங்களிற்கு போதுமான நிதியை ஈட்ட வேண்டும். |

**(இ) சுற்றுலாப் பணியகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆகஸ்ட் 01 முதல் 2021 திசெம்பர் 31 வரை பணியகத்திற்கு பொருத்தமான எண்ணிக்கையிலான ஊழியர்களை அங்கீகரிக்காமல், அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 12 மில்லியன் செலுத்தப்பட்டது. | கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் பதவியணியினரிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | பதவியணியினரை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஈ) முன்பள்ளி கல்வி அலுவலகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த 05 வருடங்களாக சபைக் கூட்டங்களை நடாத்துதல், முன்பள்ளி கல்வி ஆலோசனைக் குழுக்களை உருவாக்குதல், முன்பள்ளிகளின் எண்ணிக்கை, ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளின் கணக்கெடுப்பு, வருமான மூலங்களை உருவாக்குதல், பாடத்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை நிறுவுதல், முன்பள்ளி ஆசிரியர்களிற்கான பயிற்சி போன்றன நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், செயலாற்றலை மதிப்பீடு செய்யாமல் மீளாய்வாண்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட சம்பளங்களாக ரூபா 132.84 மில்லியன் செலுத்தப்பட்டது. | எதிர்காலத்தில் தரவரிசைப்படுத்தல் முறைமையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் இது தொடர்பாக மேலதிக கவனம் செலுத்துமாறு கள உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். | முன்பள்ளி ஆசிரியர்களின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |